**கல்வி அமைச்சு - தொழில் நுட்ப பிரிவு இசுறுபாய, பத்திரமுல்ல**

**28 மனைப்பொருளியல்**

**2024 க.பொ.த (உயர்தரம்) மாதிரி முன்னோடி வினாபத்திரம்**

**பகுதி - II**

நேரம் 3 மணி 10 நிமிடங்கள்

அறிவுறுத்தல்

**முதலாம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

- வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

(1)

I. "**துரிதப்படுத்தப்பட்ட பச்சை வீட்டு விளைவு**" என்பதனை அறிமுகம் செய்க.

II. மின்வழங்கும் பிரதான **இரண்டு** முறையைப் பெயரிடுக. அதில் **ஒன்றை** சுருக்கமாக விளக்குக.

III. பெப்தைட்டு பிணைப்பு அறிமுகம் செய்க.

IV. உணவுச் சமிபாட்டின் போது பெருங்குடலில் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

V. செயற்கை நார்கள் உற்பத்தியின் போது பல்பகுதியங்களை நாராக மாற்றும் செயல்முறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

VI. நூல் உற்பத்தியின் அடிப்படைப் படிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

VII. சமூகம் சார்ந்த ஓய்வுக்கு பொருத்தமான **இரண்டு** செயற்பாடுகள் தருக.

VIII. சேதனப்பயிர்ச் செய்கையின் நன்மைகள் **இரண்டு** தருக.

IX. உள அழுத்தத்தினால் வெளிக்காட்டப்படும் மனவெளிச்சி இயல்புகள் **நான்கைக்** குறிப்பிடுக.

X. வாய்மொழித் தொடர்பாடலின் அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(புள்ளி 2 × 10 = மொத்த புள்ளிகள் 20)

(2)

I. வடிவமைப்பின் கோட்பாடாகிய விகித சமத்தினை அறிமுகம் செய்து அதற்கு ஓவியக்கலைஞர் பயன்படுத்தும் எண்ணக்கருக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(புள்ளி 04)

II. மனிதனாலாக்கப்பட்ட சூழலை வடிவமைக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய பயன்பாட்டுக் காரணியான "அமைப்பும் அமைவும்" தெளிவுபடுத்துக.

(புள்ளி 04)

III. அதிகரித்து வரும் நீர்த்தேவைக்கான ஒரு தீர்வாக மழைநீர் சேகரித்து வைப்பதன் நன்மைகள் **நான்கு** தருக.

(புள்ளி 04)

IV. மாற்று சக்தி மூலங்களைக் குறிப்பிட்டு அதில் **ஒன்றை** விளக்குக.

(புள்ளி 04)

(மொத்த புள்ளிகள் 16)

(3)

I. பொறிமுறைச்சமிபாடு , இரசாயனச்சமிபாடு அறிமுகம் செய்க.

(புள்ளி 03)

II. உக்கிர குறையூட்ட நிலைமைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அந் நோய்க்கான **இவ்விரண்டு** அறிகுறிகளைக் குறிப்பிடுக.

(புள்ளி 04)

III. பாலும் பாலுற்பத்திகளும் உணவு வேளையில் சேர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை **நான்கு** விடயங்களினூடாக விளக்குக.

(புள்ளி 04)

IV. உடல் கொழுத்த நிலையிலுள்ள ஒருவருக்கு ஒரு நாளைக்கான உணவுத்திட்டத்தை திட்டமிடுக.

(புள்ளி 05)

(மொத்த புள்ளிகள் 16)

(4)

I. உணவுத் தொற்றுக்குள்ளாதலை அறிமுகம் செய்து, அதன் மூலம் ஏற்படும் நோய்கள் **மூன்று** பெயரிடுக.

(புள்ளி 04)

II. உடலில் ஒட்சியேற்றம் காரணமாக உணவில் நுண்ணங்கிகள் வளர்ச்சியால் தாக்கம் செலுத்தும் முறையை தெளிவுபடுத்துக.

(புள்ளி 04)

III. பொறிமுறை உலர்த்தல் முறைகள் **நான்கைக்** குறிப்பிட்டு அவற்றில் **இரண்டை** விளக்குக.

(புள்ளி 04)

IV. வணிகம் ஒன்றினை சிறந்த முறையில் நடாத்தி செல்ல உள்வாரியான ஒழுக்கங்கள், வெளிவாரியான ஒழுக்கங்கள் இவ்விரண்டு தந்து விளக்குக.

(புள்ளி 04)

(மொத்த புள்ளிகள் 16)

(5)

I. புடைவை கைத்தொழிலில் தைக்கப்பட்ட ஆடைக்கைத்தொழில் பல்வேறு படிமுறைகளில் நடைபெறும்.

(a) முன்னரான திட்டமிடல் அறிமுகம் செய்க. (புள்ளி 01)

(b) முன்னரான திட்டமிடலின் படிமுறைகளை சுருக்கமாக தருக. (புள்ளி 02)

II. விசேட சந்தர்ப்பங்களின் போது புடைவைகளுக்கு கொடுக்கப்படும் நேர்த்தியாக்கல் முறைகளில் ''சுருங்காமல் செய்தல்'' (Sanforizing) தெளிவுபடுத்துக.

(புள்ளி 04)

III. புடைவைக் கைத்தொழிலில் ஆடை நிர்மாணிப்பின் போது ஆடையின் தரத்தை மேம்படுத்துவதற்கு கையாளப்படும் **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(புள்ளி 04)

IV. வட்டவடிவமான மேசை விரிப்பொன்றை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான அலங்காரத்தினை வரைந்து, அவற்றை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அலங்காரத்தையல்களும் பயன்படுத்தப்படும் இடங்களையும் குறிப்பிடுக.

(புள்ளி 05)

(மொத்த புள்ளிகள் 16)

(6)

I. நிலைபேறான வளநுகர்வு என்பதனை அறிமுகம் செய்து, அதன் முக்கியத்துவத்தினை **மூன்று** விடயங்களின் ஊடாக தெளிவுபடுத்துக.

(புள்ளி 04)

II. உணவுப்பாதச் சுவடுகளை குறைத்துக் கொள்ள மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை விளக்குக.

(புள்ளி 04)

III. இன்பப்பொழுது போக்குகளுக்கான ஓய்வு நேரத்தை பயன்படுத்துவது தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **நான்கை** பெயரிட்டு **இரண்டை** விளக்குக.

(புள்ளி 04)

IV. சுற்றுப்பிரயாணக் கைத்தொழிலில் சமகாலப் போக்குகளை முன்வைக்குக.

(புள்ளி 04)

(மொத்த புள்ளிகள 16)

(7)

I. கட்டிளமைப்பருவ விருத்தியில் பிரதான துறைகளை பெயரிடுக.

(புள்ளி 03)

II. கட்டிளமைப்பருவத்தினர் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் **நான்கை** சுருக்கமாக விளக்குக.

(புள்ளி 04)

III. கட்டிளமைப்பருவத்தினரின் ஆளுமை விருத்தியில் பாடசாலையின் பங்களிப்பை விளக்குக.

(புள்ளி 04)

IV. "தொடர்பாடல் ஊடகம்" கட்டிளமைப் பருவத்தினருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடியதாக அமையலாம் சுருக்கமாக விளக்குக.

(புள்ளி 05)

(மொத்த புள்ளிகள் 16)

(8)

கீழ்வரும் தலைப்புகளில் **நான்னைத்** தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

I. வீட்டில் கழிவுநீர் வெளியேற்றுதல்

II. பார்ச்சர்முறை பிரயோகத்தில் உயர் வெப்ப நலை குறுகிய நேரம் (HTST)

III. நெசவு செய்யப்படாத துணி

IV. 3R எண்ணக்கரு

V. கட்டிளமைப்பருவத்தினர் முகம் கொடுக்கும் கல்விசார் பிரச்சினைகள்

(புள்ளி 4 × 4 = 16)